**தேதி :** 10.11.2025 **SC.No. :** 393/2023 PW :1 நெல்லையப்பர்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ சமயத்தில் எனக்கு வயது 59. அ.சா.2 முத்துக்குமார், அ.சா.3 சரவணன் எனது ஊர்க்காரர்கள். முத்துக்குமார் என்னுடைய மனைவியின் அண்ணன் மகன். சரவணன் என்னுடைய சித்தப்பா மகன். நான் வேலைக்கு செல்லும் போது யூனிபார்ம் போட்டு செல்வேன் என்றால் எனக்கு யூனிபார்ம் கிடையாது. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிளாங்காட்டில் டீக்கடை, மளிகைக்கடை உள்ளது என்றால் சரிதான். டீக்கடை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு எதிரே காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அருகில் பேருந்து நிலையம், ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே பெரிய நாயகம் டீக்கடை, சிவா ஸ்டோர், பாபநாசம் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் கூட்டம் கூடியது என்றால் சரிதான்.

போலீசார் சம்பவம் நடந்தவுடன் சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் தான் காவல்நிலையம் சென்றேன். அங்கு நடந்த விபரத்தை சொன்னேன் என்றால் சரியல்ல. அங்கிருந்த கான்ஸ்டபிள் என்னை மருத்துவமனைக்கு செல்ல சொன்னார். நான் போக்கு ஆட்டோவில் மருத்துவமனை சென்றேன். சம்பவத்தை குறித்து போலீசார் சம்பவநாளுக்கு பின்னர் விசாரிக்கவில்லை என்றால் மறுநாளும் வந்து

விசாரித்தார்கள். என்னை விசாரிக்கும் போது, நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்களா? என்றால் எழுதிக்கொண்டார்கள். மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். யார் விசாரித்தார்கள் என்றால் எனக்கு அவர் பதவி விபரம் தெரியாது. என்ன வகையான கத்தி என்று புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சாமி கும்பிட்டு கொண்டிருக்கும் போது சம்பவம் நடந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்னர் எதிரி என்னை தாக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி முத்துக்குமார், சரவணன் பாலமுருகன் டீக்கடையில் டீக்குடித்து கொண்டிருந்ததாக நான் புகார் வாக்குமூலத்திலும், விசாரணையிலும் சொன்னேனா? என்றால் அப்போது நான் மயக்கமாகி விட்டேன். போலீசார் அவர்களை சாட்சியாக போட்ட விபரம் எனக்கு பின்னர் தெரிந்தது. எதிரிக்கு வயது 70 தாண்டியிருக்கும். பகல் நேரத்தில் காவல்நிலையத்தின் முன்னால் வயதான எதிரி என்னை தாக்கியதாக கூறுவது நம்பத்தகுந்ததல்ல என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரி என்னை ஏசியது கிடையாது என்றாலும், என்னை கொலை முயற்சி செய்யவில்லை என்றாலும், எனக்கு ஏற்பட்ட காயம் கத்தியால் குத்தின காயமும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி என்னை தாக்கியது கிடையாது என்றாலும் சரியல்ல. பல வருடங்களுக்கு முன்பு எதிரி எனக்கு பணம் கொடுத்திருந்தார் என்றாலும், அந்த பணத்தை அவர் திரும்ப கேட்டார் என்றாலும், ஊர் பெரியவர்கள் மூலமாக என்னிடம் கொடுத்த பணத்தை

கேட்டார் என்றாலும் சரியல்ல. அதை மனதில் வைத்துக்கொண்டு, நான் பைக்கில் இருந்து கீழே விழுந்த காயத்தை வைத்துக்கொண்டு, எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில், எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ காலக்கட்டத்தில் நான் அலுவலகத்திற்கு எத்தனை மணிக்கு செல்வேன் என்றால் எனக்கு அலுவலக நேரம் 09.00 மணியாகும்.

**<u>மறுவிசாரணை</u>** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.11 18:10:36 +0530

**தேதி :** 10.11.2025 **SC.No. :** 393/2023 PW :3 சரவணன்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

அ.சா.1 எனக்கு அண்ணன் முறை வேண்டும். சம்பவ காலக்கட்டத்தில் எனக்கு 54 வயதிருக்கும். சம்பவயிடத்திற்கு எதிரே காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். கடைகள், ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கு வடபக்கம் பெட்டிக்கடை உள்ளது என்றால் சரிதான். அந்த பெட்டிக்கடையில் தகரக்கூரை போடப்பட்டிருக்கும் என்றால் தகரக்கூரைக்கு மேல் ஓலைக்கெடுவு போட்டுள்ளார்கள். அந்த கடையில் சோடாப்பாட்டில் மற்றும் வாழைப்பழம், கூல்டிரிங்ஸ் பாட்டில் விற்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அ.சா.1 என்னுடைய அண்ணன் என்ற முறையில் சம்பவத்தை நேரில் பார்க்காமல், பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்து நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். நெல்லையப்பரிடம் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவரிடம் கையெழுத்து வாங்கினார்களா? என்றால் அவருடைய கண்டிசன் சரியில்லை என்பதினால் வாங்கவில்லை. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றாலும், மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 க்கு அண்ணன் என்ற முறையில் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2025.11.11 18:10:44 +0530